பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 06 வெள்ளிக்கிழமை 22.08.2025 கதிர் 286

## இது ரகசியம் அல்ல!



தமிழர்கள் மத்தியிலிருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு புதன்கிழமை மற்றொரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழ்த் தேசிய ☞ 2

# தமிழ் தரப்பிலிருந்து மற்றொரு கடிதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு

## புதன்கிழமை அனுப்பட்டது

இலங்கை மீது சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணைய நிரந்தர மற்றும் அவதானிப்பு நாடுகளின் அங்கத்துவர்களுக்கும் தமிழ் தரப்பில் இருந்து மற்றொரு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், மத தலைவர்கள், சிவில் சமூக தலைவர்கள் என பலரது கையொப்பத்துடன் குறித்த கடிதம் அனுப்பபட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், அருச்சுனா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், அரியநேந்திரன், விக்னேஸ்வரன், முன்னாள் மகாணா சபை உறுப்பினர்களான அனந்தி, நடராசா, அருந்தபாலன், யாழ். மாநகர சபை முன்னாள் மேயர் மணிவண்ணன், வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் நிரோஷ் ஆகிய அரசியல்வாதிகளும் திருகோணமலை, மன்னார் ஆயர்கள் மற்றும் இந்து கிறிஸ்தவ மதத் தலைவர்கள், பேராசிரியர் ஒருவர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவர், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர், அரசியல் மற்றும் ☞ 2

## கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அரசுத் தலைவருடன் சந்திப்பு

### கர்தினாலும் உடனிருந்தார்

கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினர் நேற்றுமுன்தினம் அரசுத் தலைவர் அலுவலகத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தனர்.

வருடத்திற்கு மூன்று முறை நடைபெறும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் ☞ 3

## விமான சேவை நிறுவனங்களின் மோசடி குறித்து விவரம் தரலாம்

விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகியவற்றில் கடந்த காலங்களில் நடந்த ஊழல் மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய்வதற்கு நிறுவப்பட்ட அரசுத் தலைவர் விசேட விசாரணைக் குழு பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பெற எதிர்பார்க்கிறது.

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கடந்த ஜீன் 30 ஆம் திகதி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின்படி ஜூலை 01 ஆம் திகதி எடுக்கப்பட்ட இலக்கம் 25/1145/801/018 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ☞ 6

## தலையீடற்ற சுயாதீன சர்வதேச விசாரணை செம்மணிப் புதைகுழி விவாகரத்தில் தேவை

### ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

செம்மணி மனித புதைகுழியில் இனங் காணப்பட்ட 147 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 90 வீதத்திற்கும் அதிகமானவை நிர்வாணமாக்கப்பட்டுப் புதைக்கப்பட்டவையென கடந்த 14ஆம் திகதி சட்டவைத்திய அதிகாரியால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இங்கு பெரும் குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளமை அம்பலமாகியிருக்கின்றது. செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழிக்கு விவகாரத்திற்கு தலையீடுகளற்ற சுயாதீன சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். அந்த சர்வதேச நீதி விசாரணைகளில் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் சாட்சியங்களும் ☞ 3

## அரசுத் தலைவர்களின் உரித்துக் குறித்த வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

முன்னாள் அரசுத்தலைவர்களின் உரித்துரிமைகள் (நீக்குதல்) எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் ☞ 6

## வரிகளை பெருமளவு அதிகரித்தனாலேயே சுங்க வருமானமும் பெருமளவில் அதிகரிப்பு

### சுட்டிக்காட்டுகிறார் முஜிபுர் ரஹ்மான் எம்.பி.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை ஆளும்தரப்பு பெருமளவில் அதிகரித்துள்ளதாலே சுங்கத்தின் வருமானம் அதிகரித்துள்ளது. வாகனங்களுக்கான வரியை நூற்றுக்கு 200இல் இருந்து 600 வீதம் வரை அதிகரித்துள்ளது. இதனால் மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான விவதாத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுங்கத்தின் வருமானம் ஒரு ரில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளதாக சுங்க பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த வருமான அதிகரிப்பு பாரிய வரி அதிகரிப்பினால் கிடைத்த வருமானமே தவிர, சுகத்தினால் ஏதாவது உற்பத்தி செய்து பெற்றுக்கொண்ட வருமானம் அல்ல. இறக்குமதியாளர்கள் கொண்டுவரும் பொருட்களுக்கு ஆளும்தரப்பு பெருமளவில் வரி அறவிடுகிறது. அதனாலே சுகத்தின் வருமானம் ஒரு ரில்லியன் வரை அதிகரித்துள்ளது. இது பாரிய விடயம் அல்ல. இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு நூற்றுக்கு 200 இல் இருந்து நூற்றுக்க ☞ 3

## மாகாண தேர்தல் வாக்குறுதியையும் ஆளும்தரப்புப் பொய்யாக்கக் கூடாது

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வலியுறுத்து

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை நடத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு அரசமைப்பு ரீதியிலான நிர்வாக அதிகாரங்களை வழங்கவேண்டும். ஏனைய வாக்குறுதிகளைப் போன்று மாகாண சபைத் தேர்தல் வாக்குறுதியையும் ஆளும்தரப்பு பொய்யாக்க கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ☞ 6

## தபால் ஊழியர்கள் போராட்டத்தால் இலங்கை முழுவதும் மக்கள் அவதி

தபால் தொழிற்சங்கங்களினால் 6 நாட்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலை நிறுத்த போராட்டத்தினால் நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். தபால் உத்தியோகத்தர்களின் சகல விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த வேலை நிறுத்த போராட்டம் ☞ 2

## ரணில் கைது குறித்து வெளியான தகவல் நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்

### எதிர்க் கட்சி எம்.பி தயாசிறி பாய்ச்சல்

குற்றப் புலனாய்வு பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க வரும் முன்னாள் அரசுத் தலைவர் நிச்சயமாக கைது செய்யப்படுவார். இவ்வாறு இடம்பெறாவிட்டால் தனது யூடியுப் அலைவரிசையை நிறுத்துவதாக யூடியுப் அலைவரிசை சுதா அறிவித்துள்ளார். இது நீதித்துறைக்கு விடுக்கப்படும் பெரும் அச்சுறுத்தலாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான விவதாத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. வாக்குமூலம் வழங்க வரும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க நிச்சயமாக கைது செய்யப்படுவார் எனவும் அவ்வாறு இடம்பெறாவிட்டால், தான் முன்னெடுத்துவரும் யூடியுப் அலைவரிசையை நிறுத்துவதாக யூடியுபர் சுதா தெரிவித்துள்ளார்.

யூடியுப் சுதாவின் இந்த பேச்சு, சட்டத்தின் மீது மேற்கொள்ளும் அழுத்தமாகும். சட்டத்தின் ஆதிபத்தியத்தை ☞ 3

## ரணிலிடம் இன்று விசாரணை சிஐடிக்கு வருமாறு அழைப்பு

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு (சிஐடி) விசாரணைகளுக்காக இன்று (22) அழைக்கப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் நிதி விசாரணை பிரிவின் மூன்றாம் இலக்க பொறுப்பதிகாரியினால் இவ்வாறு அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்க நிதியை பயன்படுத்தி மேற்கொண்டதாக கூறப்படும் தனிப்பட்ட விஜயம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக அவர் இவ்வாறு விசாரணை வலயத்துக்குள் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த 4ஆம் திகதி இந்த விவகாரத்தில் ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மக்கள் முன்னணியினால் தயாரிக்கப்பட்ட ஒரு கடிதமும் அங்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில்தான் தமிழ் அரசுக் கட்சி ஒப்பமிடவில்லை என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டித் திரிந்தார். தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்த கதவடைப்புப் போராட்டம் நியாயமானது என்றபோதும் அதனை முன்னணி ஆதரிக்காமல் விட்டதற்கான பின்னணியிலும் இந்தக் கடித விவகாரத்தால் ஏற்பட்ட மனத்தாங்கல்கள் இருக்கின்றன. தனது தலைமையில் தயாரிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் அரசுக்கட்சி கையெழுத்திட விடாமல் சுமந்திரன் தடுத்துவிட்டார் என்பதே கஜேந்திரகுமாரின் குற்றச்சாட்டு. இப்போது மதுரைக்கு வந்த சோதனையாக ஐ.நாவிற்கு அனுப்பப்பட்ட இரண்டாவது கடிதத்தில் கஜேந்திரகுமாரே கையெழுத்திடவில்லை.

செல்வம அடைக்கலநாதன், அருச்சுனா ஆகியோர் இரண்டாவது கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகக் கையெழுத்திட்டுள்ளனர். ஆனால் கஜேந்திரகுமார் கையெழுத்திடவில்லை. இந்தலட்சணத்தில்தான் அவர் தமிழ் அரசுக் கட்சி தனது கடிதத்தில் கையெழுத்திடவில்லை என்று குற்றஞ்சாட்டி ஒற்றுமைப்போதனைகளைச் செய்துவருகிறார் என்பதையும் கவனிக்கவேண்டும்.

இந்தக் கையெழுத்துப் பிரச்சினை ஒருபுறம் இருக்க, இந்த இரு கடிதங்களிலும் முன்னுரிமைப்படுத்தப்பட்டிருக்கும் விடயங்களும் வேறுபடுகின்றன. முன்னணி அனுப்பிய கடிதத்தில் இலங்கையில் நடந்த குற்றங்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (ICC) விசாரணையை முதன்மைக் கோரிக்கையாக வலியுறுத்தியுள்ளது. புதன்கிழமை அனுப்பப்பட்ட இரண்டாவது கடிதத்தில் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறை (IIIM) வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டில் எந்தக் கோரிக்கையை முதன்மைப்படுத்துவது என்ற பிரச்சினையொன்று முன்னணி கடிதம் அனுப்பும்போதே ஏற்பட்டது என்பதை வாசகர்களுடன் ஏற்கனவே பகிர்ந்துகொண்டிருந்தேன் என்பது அவர்களுக்கு நினைவிருக்கலாம்.

இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்தது என்பதை முதன்மைப்படுத்தி அதற்காக ட்ரிபிள்ஐ.எம் (IIIM) பொறிமுறையைக் கேட்காமல் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட தனிநபர்களை இலக்கு வைக்கும் வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை முன்னணி வலியுறுத்துகின்றது, இதன் மூலம் இனப்படுகொலை விடயத்தை இரண்டாம் பட்சமாக்குகின்றது என்பது அதன் எதிராளிகளினதும், அதனது முன்னாள் கூட்டாளிகளினதும் குற்றச்சாட்டாக இருந்தது. ஆனால் அதனை கஜேந்திரகுமாரின் எதிரிகளின் சதி என்ற ஒற்றைவரியில் முன்னணி முடித்துக்கொண்டது. அது சதியல்ல உண்மையான கோரிக்கைதான் என்பதை வலியுறுத்தும் வகையில்தான் இப்போது இரண்டாவது கடிதம் ஐ.நாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த இரு கடிதங்களிலும் இலங்கை அரசை ஏதாவது ஒரு நாடு நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) நிறுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு சர்வதேச ரீதியில் ஒரு விசாரணையை நடத்தக்கூடிய சாத்தியமான மூன்று வழிவகைகளையுமே இப்போது வலியுறுத்தியாகிவிட்டது. இந்த மூன்று வழிகளும்தான் உலக அரங்கில் இருக்கின்றன. நாம் இரண்டு கடிதங்களை எழுதி அந்த மூன்றையும் வலியுறுத்திவிட்டோம். இதுவரையில் சர்வதேச விசாரணை என்று அநாமத்தாக உருட்டி வந்தவர்கள் இப்போது என்ன தேவை என்று பெயர் குறிப்பிட்டு இருக்கின்ற எல்லாவற்றையும் கேட்டுவிட்டார்கள்.

சரி, இந்த மூன்றில் ஒன்றாவது நிறைவேறுமா என்று கேட்டால் "நிறைவேறினால் மகிழ்ச்சிதான்" என்பதுதான் மக்களுக்கான உண்மையான பதில். ஆனால், இதை வைத்தே இன்னும் 15 ஆண்டுகளுக்கு இந்த அரசியல்வாதிகள் தமது அரசியலை ஓட்டிவிடுவார்கள். நான் கேட்டதுதான் சரி, அவர் கேட்டது பிழை, மற்றவர் கேட்கவேயில்லை, அதனால் அவர் துரோகி என்று உருட்டிப் பிரட்டி அவர்கள் பிழைத்துக்கொள்வார்கள். போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்த நிலையில் தாம் நிலைத்து நிற்க கொழுகொம்பு இல்லாமல் அலைந்த அவர்களுக்கு இப்போது IIIM, ICC, IJC என்ற மூன்று கொழுகொம்புகள் கிடைத்துள்ளன. இந்த மூன்று பெயர்களையும் வைத்து மக்களைக் குழப்பியடித்தே அடுத்த 15 ஆண்டுகளை இவர்கள் ஓட்டிவிடுவார்கள்.

மொத்தத்தில் 30 ஆண்டு கால ஆயுதப் போராட்டத்திற்குப் பின்பாக சர்வதேசக் களத்தில் மேலும் 30 ஆண்டு காலம் நடத்திய போராட்டம் சாதகமாகப் போகாததற்கு எந்தக் கட்சி அல்லது எந்த அரசியல்வாதி காரணம் என்பது பற்றி ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கு வேண்டிய தரவுகளை 2040ஆம் ஆண்டில் தமிழர்கள் தாராளமாகக் கொண்டிருப்பார்கள்.

முன்னணியின் கடிதத்தில் கையெழுத்து வைத்து செல்வம் அடைக்கலநாதன், அரியநேத்திரன் போன்றவர்கள் இரண்டாவது கடிதத்திலும் கையெழுத்து வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு கடிதங்களும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டவையல்ல என்று காட்டிக்கொள்ள இதனை எழுதியவர்கள் கடும் பிரயத்தனப்பட்டதையும் அவர்களின் செய்தியாளர் சந்திப்பில் காணமுடிந்தது. அந்தக் கடிதத்தையும் இந்தக் கடிதத்தையும் சேர்த்தும் வாசிக்கலாம் விரும்பினால் தனியாகவும் வாசிக்கலாம் என்று இரண்டாவது கடிதத்தில் எழுதிவேறு இருக்கிறார்கள். ஆனாலும் தமிழர்களின் பிரச்சினைக்கு எந்தச் சர்வதேசப் பொறிமுறையூடாகத் தீர்வு காணமுடியும் என்கிற கருதுகோளுக்கும் நடைமுறைச் சாதத்தியத்திற்கும் இடையிலான முரண்பாடு அல்லது மோதலே இந்த இரு கடிதங்களும்.

இருப்பதில் ICJ தான் ஓரளவிற்கான நடைமுறைச் சாத்தியமான வழிமுறை. ஒருவேளை நடந்துவிடலாமோ என்கிற சாத்ததியப்பாட்டைக் கொண்ட வழிமுறை. அதற்கும்கூட ஒரு நாட்டின் ஆதரவு வேண்டும். இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்று அந்த நாடு முதலில் முழுமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன்பின்பே அந்த நாடு ICJக்கு செல்லமுடியும். இப்போதைக்கு கனடா மட்டுமே அரசியல் நிலைப்பாட்டளவில் இனப்படுகொலையை ஏற்றுள்ளது. ஆனால், அந்த நாடும்கூட இப்போது ICJக்குச் செல்லத் தயாராக இருக்கிறதா என்பதற்குப் பதில் இல்லை. ஒருவேளை ஏதோவொரு நாடு இணங்கினால் ICJ சாத்தியமாகலாம். அப்படியிருந்தும் அது தமிழர்களின் கடைசித் தெரிவு.

ICCக்கு இலங்கையைக் கொண்டு செல்வதாயின் அதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதிவேண்டும். அங்கு இலங்கைக்கு பக்கத்துணையாக சீனாவும் ரஷ்யாவும் வீற்றோ அதிகாரத்துடன் நிற்கின்றன. அவற்றைத் தாண்டி இதனை நிறைவேற்றுவது தற்போதைய காலச்சூழலில் கனவில்கூட காணமுடியாதது. ஞாஞானி அதனைவிடவும் சவால்கள் நிறைந்தது.

இருந்தாலும் போர் முடிந்து 15 ஆண்டுகள் கழித்து இவற்றையெல்லாம் வலியுறுத்துவது என்கிற முடிவுக்கு தமிழர் தரப்பினர் எல்லோரும் வந்திருக்கிறார்கள் என்று இரண்டாவது கடிதத்தை அனுப்பியவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால், இந்தக் கடிதத்திலும் தமிழ் அரசுக் கட்சி கையெழுத்திடவில்லை. கையெழுத்துப் போடாவிட்டாலும் பறவாயில்லை, அவர்களின் அங்கீகாரத்தைக் கடிதத்திற்குப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் கடிதம் அனுப்பியவர்கள். என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகச் செயற்பாட்டாளர்கள் 27 பேர் என 56 பேர் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

4 விடயங்களை வலியுறுத்தி இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இலங்கையில் நிகழ்ந்த இனப்படுகொலையை மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) ஒன்றை நிறுவ வேண்டும் என்பது கடித த்தின் முதன்மை வலியுறுத்தலாக அமைந்துள்ளது.

1.1948ஆம் ஆண்டு இனப்படுகொலைக் குற்றங்களைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் படி முழுக் கால அளவு அதிகாரத்தை உள்ளடக்கிய பணி ஆணையுடன், பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) நிறுவுதல்.

2. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் தங்களின் கடமைகளின் படி, உறுப்பு நாடுகள் மற்றும்-அல்லது பார்வையாளர் நாடுகள் ஸ்ரீலங்காவிற்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) வழக்குத் தொடங்குதல்.

3.செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீது சுயாதீன மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை உறுதி செய்ய போர்ன்மொத் நெறிமுறையை செயல்படுத்தக்கூடிய பன்னாட்டு நிபுணர் குழுவை அமைத்தல்.

4. பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டப் பொறுப்புகளுக்கு முரணான தற்போதைய அல்லது எதிர்கால சட்ட நடவடிக்கைகளின் இயற்றுதலை இடைநிறுத்தி, தடைசெய்தல்.

ஆகிய நான்கு விடயங்கள் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தின் முழுமையான விவரம் வருமாறு.

'பன்னாட்டு விசாரணையை நிகழ்த்துவதற்காக 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை வரைபின்கீழ் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டவை நிகழ்த்தப்பட்டுள்ளதா என்பதையும் அக் குற்றங்களின் நோக்கத்தையும் மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன் கூடிய, பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) நிறுவ வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். எந்தவொரு விசாரணைக்கும் அளிக்கப்படும் அதிகாரம், 1948 இனப்படுகொலை வரைபின்படி முழுக் காலவரையறையையும் உள்ளடக்க வேண்டும்' என்று கடிதம் வலியுறுத்துகின்றது.

ஸ்ரீலங்காவின் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள தமது தாயகத்தில் ஈழத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் சுயாதீன நீதிப்பொறிமுறையின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும் என உலகப் புகழ்பெற்ற பன்னாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில், இலங்கை அரசின் செயற்பாடுகள், முழு அளவிலோ அல்லது பகுதியளவிலேனும் ஈழத்தமிழரை அழிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருப்பதுடன் அவ்வழிப்புத் தொடர்பான எந்தவொரு விசாரணையும் நடைபெறாதவாறு நுட்பமாகத் தடை செய்துவருவதும் இனப்படுகொலை வரைபின் அகவிதி 2இன் படி இனப்படுகொலையாகும்.

1956 ஜூன் மாதம் ஸ்ரீலங்கா அரச ஆதரவுடன் சிங்களக் காடையர்களால் ஈழத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்லோயாப் படுகொலைகள் என அறியப்படும் முதலாவது பாரிய இனவழிப்பு நடைபெற்ற நாளிலிருந்து, தம்மீது நடைபெற்ற பன்னாட்டுக் குற்றங்களை விசாரிக்கும் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) அமைக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளிடம் தொடர்ந்து ஈழத்தமிழர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இப்பொறிமுறையின் ஊடாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நீண்டநாளாகத் தொடரும் வேதனையினைத் தீர்க்கவும் காணாமலாக்கப்பட்டவர்களின் விதியை அறிந்துகொள்ளவும் முடியும்.

இந்த விசாரணையில் இலங்கை அரசின் பங்கு இருந்தால் அது பாரபட்சமானதாகும், ஏனெனில் இப்பன்னாட்டுக் குற்றங்களை நிகழ்த்தியவர்களாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் அரசும் அரசுடன் தொடர்புடையவர்களும் ஆகும்.

இலங்கை அரசு, எந்தவொரு வகையிலும் பன்னாட்டு விசாரணைக்கு எதிராகவே இருப்பதுடன் ஈழத் தமிழர்களின் மீது தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையினை நிகழ்த்தும் இடைவிடாத திட்டமிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக ஐ.நா. சாசனத்தின் அகவிதி 2(7)இல் குறிப்பிடும் 'அரசிற்கிருக்கும் இறையாண்மையினை' இதற்கான பாதுகாப்புக் கவசமாக ஸ்ரீலங்கா பயன்படுத்தி வருகிறது.

ஆனால், இறையாண்மையைப் பன்னாட்டுக் குற்றங்களுக்கு எதிரான ஒரு கவசமாக பயன்படுத்த முடியாது என்பதே சட்ட ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் உறுதி செய்யப்பட்டுள்ள நியதி ஆகும். இதனை, சிரியாவுக்கு விசாரணை செய்ய ஐ.நா. மனித உரிமை ஆணையகம் ஏற்படுத்திய விசாரணைக் குழு போன்ற ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆகியவை எடுத்த செயற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

ஈழத்தமிழர்கள் பன்னாட்டு மனிதாபிமான சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுவோர் என்ற நம்பிக்கையில் நாம் தொடர்ந்தும் இருக்கிறோம். இந்நம்பிக்கையின்படி பன்னாட்டு விசாரணையைக் கோருவதற்கு உரிமையும் எங்களுக்கு உள்ளது.

இவற்றினடிப்படையில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 60வது கூட்டத் தீர்மானம்,

(அ) ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) அமைக்க அதிகாரம் அளிக்க வேண்டும், அல்லது

(ஆ) அத்தகைய பொறிமுறையை அமைக்க ஐ.நா. பொதுச்சபையிடம் கோரிக்கை விடுக்கும் விதமாக இருக்க வேண்டும்.

எனக் கவனமாக வலியுறுத்துகிறோம். இந்தப் பொறிமுறைக்கு 1948ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைவரைபின் கீழ் குற்றச் செயல்களின் வடிவமைப்பைத் தீர்மானிக்கும் அதிகாரமும், சம்பந்தப்பட்ட முழு காலவரையறையையும் உள்ளடக்கும் அதிகாரமும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

2. ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு ஸ்ரீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிக்க, இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் அகவிதி ஞாயீ ன்கீழ், முழுமையான காலவரையறையையும் உள்ளடக்கும் வகையில், ஸ்ரீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர், பார்வையாளர் நாடுகள், வழக்குத் தொடங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புத்துறை அமைச்சராக இந் நாட்டின் சனாதிபதி உள்ள நிலையில் ஸ்ரீலங்கா பாதுகாப்பு படைகள் செய்த போர் குற்றங்களும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் அரசின் முழுமையான ஒத்துழைப்பின்றி சாத்தியமற்றவை எனவும் அரசின் நேரடி பொறுப்புடனேயே நிகழ்ந்ததாகவும் சுயாதீனமாக அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இங்கு குறிப்பாக, ஐ.நா. பொதுச் செயலரின் நிபுணர் குழு (2011), இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையரின் விசாரணை (OISL அறிக்கை, 2015), மற்றும் 2007இல் சித்திரவதைகளுக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் பயணம் ஆகிய அறிக்கைகளைக் கருத்திற்கொண்டாலே இக்குற்றங்கள் அரச பின்புலத்தில் நிகழ்த்தப்பட்டதற்குப் போதுமான ஆதாரங்களை வழங்கியுள்ளன. இந்த உறுதியான ஆதாரத் தொகுப்பு, ஸ்ரீலங்காவிற்கு எதிராகப் பன்னாட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஆதாரமாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

இப்போது 16 ஆண்டுகள் கடந்தும், தங்கள் மீது நடைபெற்ற இனப்படுகொலையின் உச்சத்தை இந்த உலகம் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்ததுடன், நுணுக்கமாக அவ் இனப்படுகொலையை மறுப்பதும், அமைதியாக இருப்பதன் மூலம் புறக்கணிப்பதும் ஸ்ரீலங்கா தொடர்ந்து மேற்கொண்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைச் செயல்களுக்கு உலகம் ஆதரவு அளிப்பதாகவே ஈழத் தமிழர்கள் உணர்ந்து வருகின்றனர்.

1948 இனப்படுகொலை வரைபின் அகவிதி ஞாயீ இல் குறிப்பிடப்பட்டிருக்கும் உடன்படிக்கை அடிப்படையிலான அதிகாரப் பிரிவின் கீழ், அவ்வரைபில் பங்கேற்றிருக்கும் இரண்டு நாடுகளுள் ஒன்று, மற்றொரு நாடு மேற்கொள்ளும் மீறல்களைக் குற்றஞ்சாட்டி நேரடியாக வழக்குத் தொடங்கலாம். ஸ்ரீலங்கா 12 அக்டோபர் 1950 அன்று அவ்வரைபின் அகவிதி IX உட்பட அனைத்து விதிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு அவ்வரைபில் இணைந்துள்ளது. இதனால், UNHRC இன் எந்த ஒரு உறுப்பினர் அல்லது பார்வையாளர் நாடும், ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கான ஸ்ரீலங்கா அரசுப் பொறுப்பை நிரூபிக்க நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

எனவே, குறைந்தபட்சம் ஒரு உறுப்பினர் அல்லது பார்வையாளர் நாடு, ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கான ஸ்ரீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிப்பதற்காக, இனப்படுகொலை வரைபில் அகவிதி IX கீழ், ஸ்ரீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்.

3. இலங்கையின் வடபகுதியில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகளை மேற்பார்வை செய்வதற்காக, 'மனிதப் புதைகுழி பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான சர்வதேச நெறிமுறைகள் - போர்ன்மொத் நெறிமுறை' (The Bournemouth Protocol) கீழ் அதிகாரம் வழங்கப்பட்டு பன்னாட்டு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என வலியுறுத்தல்.

வலியுறுத்தல் 1-இன் பந்திகள்; 3 மற்றும் 4-ஐ மேற்கோள் காட்டுகையில், ஸ்ரீலங்கா அரசின் ஆதரவோடு நடைபெறும் எந்தவொரு விசாரணையும் இயல்பாகவே

தொடர்ச்சி 3 ம் பக்கம்.....

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகுபாடுடையதாக இருக்கும் என்பது தெளிவாகிறது. செம்மணி மனிதப் புதைகுழி, ஈழத் தமிழ் பொதுமக்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டதற்கான வெளிப்பட்ட சான்றாக திகழ்கிறது. எலும்புக் காவல்கள், பாதிக்கப்பட்டவர்களில் குழந்தைகள், இளம் குழந்தைகள் கூட இருந்ததை வெளிப்படுத்துகின்றன.

முப்படை மற்றும் காவல்துறையை உள்ளடக்கிய அரசின் ஆதரவுடன் செயல்பட்ட அமைப்புகள், ஈழத் தமிழ் பொதுமக்களை படுகொலை செய்து, இரகசியமாக புதைத்தன என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. அரசின் ஆதரவுடன் நடைபெறும் இனப்படுகொலைக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட சமூகம்; தங்களைப் பாதுகாக்க முயன்ற போதிலும், "உலகளாவியபயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என்ற கோதாவில் ஈழத் தமிழ்மக்களின் மீது அழித்தொழிப்பு நடத்தப்பட்டது. செம்மணி மனிதப் புதைகுழியானது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தாண்டி, அடையாளம் காணப்பட்ட ஈழத்தமிழ் மக்களைப் பகுதியளவிலேனும் அழிக்கத் திட்டமிட்ட நோக்கம் இருந்ததை வெளிப்படுத்தும் உறுதியான சான்றாகும். இது, ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டை வலுப்படுத்துகிறது.

ஸ்ரீலங்காவின் நீதித்துறை வரலாற்றில், சட்டத்திற்குப் புறம்பான கொலைகளுக்கான ஆதாரங்கள் மறைக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. மொஹமட்தாஜுதீன்வழக்குஅவற்றில்ஒன்று. இத்தகைய அச்சுறுத்தும் முறை, உள்நாட்டு விசாரணைகளின் நேர்மையைப் பற்றித் தீவிரமான சந்தேகங்களை எழுப்புகிறது. இத்தகைய செயல்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்ற எந்த அறிகுறியும் இல்லை, மேலும் செம்மணிவழக்கும்அதேநிலையைசந்திக்கும் என்றநியாயமானஅச்சம்ஈழத்தமிழ்மக்களிடம் உள்ளது. ஊடக அறிக்கைகளின் படி 2023 செப்டம்பரில், ஸ்ரீலங்காவின் வடபகுதியான முல்லைத்தீவில் பணியாற்றிய ஒரு தமிழ் நீதிபதி, உயிரச்சுறுத்தல் மற்றும் கடுமையான மன அழுத்தம் காரணமாக, தனது பதவியை விடுத்து ஸ்ரீலங்காவைவிட்டுவெளியேறினார். அவரின் ராஜினாமா, ஒரு தொல்பொருள் தள வழக்கை உள்ளடக்கிய சில நுணுக்கமான வழக்குகளுக்கான அழுத்தம் மற்றும் அவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்டது. இது, இங்குபாதுகாப்பின்மையையும் நீதித்துறையின் சுயாதீனமின்மையையும் வெளிப்படுத்துகிறது.

இந்த உண்மைகளின் அடிப்படையில், செம்மணி மனிதப் புதைகுழி தளத்தில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியை மேற்பார்வை செய்து கண்காணிக்கவும், வழக்கு நடைமுறைகளில் பன்னாட்டுத் தலையீட்டை எளிதாக்கவும், "போர்ன்மொத் நெறிமுறை" (The Bournemouth Protocol ) பிரேரிக்கும் அதிகாரத்துடன் கூடிய சுயாதீன நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்ற முன்மொழிவை, ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் தீர்மானத்தில் சேர்க்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

4. ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 60ஆவது தீர்மானத்தில், பன்னாட்டு மனித உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு வரைபுகளுக்கு முரணான தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் திருத்தச்சட்டங்கள் மற்றும் புதிய சட்டங்களை இயற்றுவதை நிறுத்துமாறு வலுவான அழைப்பைச் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

1983 ஆகஸ்ட் 8 அன்று இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட 6ஆவது திருத்தச் சட்டம், குமுகாய மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை (ICCPR - 23 மார்ச் 1976) ஐ வெளிப்படையாக மீறுகிறது. இது, சுயாட்சி அரசியல் நிலையைத் தீர்மானிக்கும் உரிமையை அமைதியான முறையில்வலியுறுத்துவதைகுற்றமாக்குகிறது. இதன்மூலம் இவ்வரசியலமைப்புத்திருத்தமே பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் (PTA) முன்னோடியாகச் செயல்பட்டது. மேலும் இத்திருத்தமானது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவியை பறித்தும், அரசியல் கருத்தொன்றை மட்டும் கொண்டதற்காக கடுமையான குடியுரிமைத் தடைகளையும் விதித்தும் வருகிறது.

இந்த திருத்தச் சட்டம், அகவிதி 1இன் கீழ் ஈழத்தமிழ் மக்களுக்கு தங்கள் அரசியல் நிலையை சுதந்திரமாகத் தீர்மானிக்கும் உரிமையை மறுக்கிறது. அகவிதி 19இன் கீழ் பாதுகாக்கப்படும் ஜனநாயக கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குகிறது. அகவிதி 25 இன் கீழ் உறுதியளிக்கப்படும் அரசியல் பங்கேற்பைத் தடுக்கிறது. மேலும், அகவிதி 26 ஐ மீறி, ஒரேயொரு சமூகத்தை மட்டுமே குறிவைக்கிறது. இதனால், தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கு ஜனநாயக வழிமுறைகளால் தீர்வு காணும் அனைத்து வாயில்களையும் மூடியதன் ஊடாக ஸ்ரீலங்காவின் பன்னாட்டுக் கடப்பாடுகளுக்கு முரணான கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ளது.

இருப்பினும், ஸ்ரீலங்கா அரசு, இத்தகைய கொடூரமான நடவடிக்கைகளின் அடிப்படைக் காரணமான 6வது திருத்தச் சட்டத்தைத் தொடாமல், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை நீக்குவதற்கு மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினைப் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கும் வழி திறந்தேயிருக்கின்றது. மேலும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை நீக்குவதற்கான தெளிவான காலக்கெடு எதுவும் இல்லை. இதனால், பயங்கரவாதத் தடுப்புசட்டமானது தொடர்ந்தும் அடக்குமுறை மற்றும் அச்சத்தின் கருவியாக இருந்து வருகிறது. குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புசட்ட நடைமுறையில், ஈழத்தமிழ்குமுகாய மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், இராணுவம் கைப்பற்றிய நிலங்களின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அச்சத்தில் வாழ்கிறார்கள்.

2007ஆம் ஆண்டின் இலங்கை ICCPR சட்டமும், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமும் பன்னாட்டு ICCPR இன் கொள்கைகளை முழுமையாகவும் ஒருமைப்பாட்டுடனும் நடைமுறைப்படுத்தாததால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளன. அவற்றின் அமுலாக்கம் பெரும்பாலும் காவல்துறையின் கீழ் இருப்பதால், தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் உள்படபல்வேறு சமூகங்களுக்கு எதிராக அச்சட்டங்கள் பிரயோகிக்கப்படும்போது பாகுபாடாகப் பொருள்கோருவதும் விளக்கமளிப்பதும் செயற்படுவதும் நிகழ்கிறது.

எனவே, ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் தீர்மானத்தில், 6வது திருத்தச் சட்டத்தை நிறுத்தவும், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினை ஒரு குறிப்பிட்ட மற்றும் அமுலாக்கக்கூடிய காலக்கெடுவில் நீக்கவும் ஸ்ரீலங்காவிற்குத் தெளிவான, உறுதியான கோரிக்கையைச் சேர்க்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம். மேலும், பயங்கரவாதத் தடுப்பு சட்ட விதிகளை இன்னும் ஆபத்தான பிரிவுகளுடன் மீண்டும் அறிமுகப்படுத்தும் அல்லது மாற்றியமைக்கும் எந்தச் சட்ட முயற்சிகளையும் ரத்து செய்யவும் வலியுறுத்த வேண்டும்.

மற்றும், 6வது திருத்தச் சட்டம் போன்ற, பன்னாட்டு மனித உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு உடன்பாடுகளுக்கு முரணான எந்தவொரு சட்டத்தினையோ அல்லது அரசியலமைப்புதிருத்தங்களையோ எதிர்காலத்தில் உருவாக்குவதைத் தடுக்க வேண்டும். மேலும், ஈழத் தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிக்கும், அமைதியான இணைந்த வாழ்வை அச்சுறுத்தும், மற்றும் நிலங்களைமறுபெயரிடல் அல்லது அரசின்கட்டுப்பாட்டின்கீழ்கைப்பற்றும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நிறுத்துவதையும்நாங்கள்வலியுறுத்துகிறோம்

முடிவாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60ஆவது அமர்வு தனது தீர்மானத்தில் பின்வரும் நடவடிக்கைகளை சேர்க்குமாறு வலியுறுத்தப்படுகிறது-என்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் செப்டெம்பர் மாதம் தொடங்கவுள்ள நிலையில் ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான தமிழர் பேரவையினாலும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் கையெழுத்து வைத்துள்ள சிலரும் இந்த இரண்டாவது கடிதத்திலும் கையெழுத்து வைத்துள்ளனர்.

## ரணில் கைது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பதாகவே அரசுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். பாதுகாத்த முறையைத்தான் இப்போது காணக்கூடியதாக இருக்கிறது. குற்றப்புலனாய்வு பிரிவுக்கு வரக்கூடிய ஒருவரை, அவரை கைது செய்யவேண்டும், இல்லாவிட்டால் யூடியுப் அலை வரிசை நிறுத்துவதாக தெரிவிக்கும் அளவுக்கு யூடியுப் நடத்தக்கூடிய ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பது தொடர்பில் அரசுத் தலைவர் நாடாளுமன்றத்துக்கு வந்து மணித்தியாலக்கணக்கில் உரையாற்றினாலும், அதனை செயற்படுத்த முடியாது என்றால், அதில் பயனில்லை.

அதேநேரம் ஹிமோகுளோபின் தடுப்பூசி கொள்வனவில் இடம்பெற்ற குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சிறைக்கு சென்றார். ஹிமோகுளோபின் மாதிரியை இலங்கை நிறுவனம் ஒன்று கொண்டுவந்தபோது அது தரநிர்ணய சோதனையில் வெற்றிபெறவில்லை. இதனால் இந்த மருந்தை விநியோகிப்பதை தடுத்து, சுகாதார பிரிவின் என்.எம்.ஆர். இந்த ஹிமோகுளோபின் மருந்துப் பொருட்களை வாபஸ் பெறுமாறு தெரிவித்திருந்தது.

ஆனால் வாபஸ்பெறுவதை கைவிட்டு, இந்த மருந்துகளுக்கு இந்தியாவின் கம்பனி ஒன்றில் இருந்து சான்றிதழ் பெற்றுவரப்பட்டது. இப்படிக் கொண்டுவரப்பட்ட மருந்தால் 3 பேர் உயிரிழந்தனர். இதற்கு யார் பொறுப்புக்கூறுவது? சிறைக்குச்செல்வது யார்? இது தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன எனக் கேட்கிறோம் என்றார்.

## கத்தோலிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கர்தினால் அரசுத் தலைவருக்கு விளக்கினார்.

மேலும் கத்தோலிக்கசபையில் எழுப்பப்பட்ட கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரல்ட் அந்தோணி பெரேரா மற்றும் பேரவையின் உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வரிகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

600வரை வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி அதிகரிக்கும்போது சுங்கத்தின் வருமானம் அதிகரிப்பது என்பது சாதாரண விடயம்.

ஆளும்தரப்பு இறக்குமதியாளர்களுக்கு அதிகரித்திருக்கும் வரிகளை, அவர்கள் நுகர்வோரிடமிருந்தே அறவிடுகின்றனர். அதனால் இன்று மக்களுக்கு பொருட்களை விலைக்குவாக்கும்இயலுமைகுறைந்துள்ளது. அதனாலே நாட்டில் குறைந்த வருமானம் பெறுபவர்களின்வீதம்அதிகரித்துள்ளது. அதன் காரணமாகவே ஆளும்தரப்பு வருமானம் குறைந்தமக்களுக்கானஅஸ்வெசுமநிவாணர திட்டங்களை அதிகரிக்கிறது.

குறிப்பாக 2020இல் சாதாரணமாக மத்திய வகுப்பில் இருப்பவர்கள் பயன்படுத்தும் சுசுகி, வகன்ஆர், எல்டா போன்ற வாகனம் 25இலட்சத்துக்கே இருந்தது. தற்போது படி வாகனம் 75 இலட்சம் ரூபா, வகன்ஆர் 95இலட்சம் ரூபா, ஜப்பான் எல்டோ கார் 72இலட்சம் ரூபா வரை அதிகரித்துள்ளது. இவ்வாறு வாகனங்களுக்கான வரியை அதிகரித்து, மக்களுக்கு சாதாரண விலைக்கு வாகனம் பெற்றுக்கொடுப்பதாக ஆளும்தரப்பு தெரிவிக்கிறது.

சாதரண மக்கள் பயன்படுத்தும் இந்தியாவின் டிஸ்கவரி மோட்டார் கைக்கிள் 2020இல் 2அரை இலட்சம் ரூபாவுக்கே இருந்தது. தற்போது அது 5இலட்சம் ரூபா. ஒன்றரை இலட்சத்துக்கு இருந்த சி,டி 100 ரக மோட்டார் சைக்கிள் இன்று 3அரை இலட்சம் ரூபா. பெண்கள் ஓட்டும் ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் 2020இல் 2அரை இலட்சத்துக்கு இருந்தது. தற்போது 6இலட்சம் ரூபா. அரசுத் தலைவர் தேர்தல் மேடைகளில் இளைஞர்களை பார்த்து, ஜப்பான் மோட்டார் சைக்கிள் ஓட்ட ஆசை இல்லையா என்றே கேட்டார். ஆனால் ஜப்பான் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதைவிட சாதாரண துவிச்சக்கரம் ஒன்றைக்கூட விலைக்கு வாங்க முடியாத அளவுக்கு ஆளும்தரப்பு வரி அதிகரித்துள்ளது.

அதேபோன்று ஆளும்தரப்பு ஒருகிலா அரிசிக்கு 65 ரூபா வரி அறவிடுகிறது. அதேபோன்று ஒரு கிலோ உப்புக்கு 40 ரூபா வரி அறவிடுகிறது. கோதுமை மா ஒரு கிலோவுக்கு 46ரூபா வரி அறவிடுகிறது. ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து 9 மாதங்களில் அரச நிறுவனங்கள் மூலம் வருமானத்தை அதிகரித்துக்கொண்டிருக்கிறதா என கேட்கிறோம். துறைமுகத்துக்கு வரும் பொருட்களுக்கு பெருமளவில் வரி அறவிட்டே ஆளும்தரப்பு வருமானத்தை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இதனால் மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பயன்படுத்தப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனம் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. ஜப்பானில் இருந்து வந்த காவன கப்பல்கள் துறைமுகத்தில் வாகனங்களை இறக்குவதற்கு இடமில்லை என சில கப்பல்கள் திரும்பிச் சென்றுள்ளன. இந்த பிரச்சினையை தீர்த்துக்கொள்ள அரசாங்கத்துக்கு முடியாமல் இருக்கிறது. சுங்க திணைக்களம் அரசுத் தலைவர் யின் கீழே இருக்கிறது, இறக்குமதி கட்டுப்பாட்டு திணைக்களம் இருப்பது நிதி அமைச்சின் கீழ், இந்த இரண்டும் இருப்பது அரசுத் தலைவர் க்கு கீழாகும். அப்படியிருக்கையில் இந்த இரண்டு தரப்பினரையும் ஒரு மேசைக்கு அழைத்து ஏன் இந்த பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முடியாது.? வினைத்திறன், இயலுமை இல்லாமையே இதற்கு காரணமாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு துறைமுகம் டொலர்களில் நட்டஈடு வழங்க வேண்டி இருக்கிறது. அந்த நட்டஆடு சீனாவுக்கே செல்கிறது. இதன் காரணமாக வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கப்படும்போது, அதனால் மக்களே பாதிக்கப்படுகிறார்கள். அதனால் ஆளும்தரப்பு விரைவாக இதுதொடர்பில் நடவடிக்கை எடுத்து, அந்த வாகனங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் செலுத்தவேண்டிவரும் நட்டஈட்டை குறைத்துக்கொள்ள முடியும் என்றார்.

## தலையீடற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறப்படவேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை, நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி அகழ்வாய்வில் சர்வதேச கண்காணிப்பு அவசியமென்பதை வலியுறுத்துவதுடன், சர்வதேச நிபுணத்துவம் பின்பற்றப்பட்டு அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தோடு செம்மணி அகழ்வாய்வுப்பணிகளுக்குரிய தொழில்நுட்பம்சார் நிபுணத்துவத்தை வழங்குவதுதொடர்பில் ஆராய்ந்துவருவதாக பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் அபிவிருத்தி விவகாரங்கள் இராஜாங்க செயலாளர் டேவிட் லமி அண்மையில் தெரிவித்துள்ளார். அவரின் இக்கருத்தினை வரவேற்பதுடன், அவருக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து இதுவரையில் மொத்தம் 147மனித எலும்புக் கூட்டுத்தொகுதிகள் இனங்காணப் பட்டுள்ளன. அவற்றிலிருந்து 140 மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நாளை (இன்று) 22ஆம் மீண்டும் அகழ்வாய்வுப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும் இந்த அழ்வாய்வுகளில் ஈடுபடும் தொல்லியல் பேராசிரியர் ஜ சோமதேவ கடந்த 14.08.2025அன்று நீதிமன்றுக்கு சமர்ப்பித்த அறிக்கையில்இ அகழ்வாய்விற்கு இன்னும் குறைந்ததுஎட்டுவாரங்கள்தேவைப்படுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை இனங்காணப்பட்ட 147மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகளில் 90வீதத்திற்கும் அதிகமானவை நிர்வாணமாக்கப்பட்டுப் புதைக்கப்பட்டவையென கடந்த 14ஆம் திகதி சட்டவைத்திய அதிகாரியால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இதன்மூலம் இங்கு பாரியகுற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன என்பதும்இ இந்தப் புதைகுழியில் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென பல்வேறு தரப்பினரும் மிகக் கொடூரமாகப் படுகொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட விடயமும் தற்போது அம்பலமாகியிருக்கின்றது. செம்மணியில் எலும்புக்கூடுகளை அடையாளங் காணும் பணிதொடர்பான விசாரணைகளில் வாக்குமூலங்களையளிக்கவரும் மக்கள்

தொடர்ச்சி 6 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வறுமை ஒழிப்பில் தெளிவு வேண்டும்

இலங்கை பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திலிருந்து இன்னும் முழுமையாக மீளவில்லை. அதன் விளைவாக வறுமை விகிதங்கள், மக்களின் வருமானத் தாழ்வு, சமூகப் பாதுகாப்பு குறைபாடுகள் ஆகியவை தொடர்ந்து தீவிர சவால்களாகவே இருந்து வருகின்றன. 2024ஆம் ஆண்டு உலக வங்கி வெளியிட்ட தகவலின்படி, இலங்கையின் வறுமை விகிதம் 24.5% ஆக இருந்தது. இது 2019ஆம் ஆண்டில் இருந்த 11.3% விகிதத்தை ஒப்பிடும்போது இரட்டிப்பு அளவாகும். வறுமை விகிதம் 2025ஆம் ஆண்டில் 22.7% ஆகக் குறையும் என்றும், நடுத்தரகாலத்தில் 20% அளவில் நிலைத்து நிற்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. அதாவது, பொருளாதார நெருக்கடி இலங்கையின் வறுமை ஒழிப்பு முயற்சிகளில் கடந்த பத்து ஆண்டுகால முன்னேற்றத்தைக் கூட பின் தள்ளிவிட்டது.

2022 மார்கழி மாதத்தில் வறுமை வரம்பு ரூ.13,777 ஆக இருந்தது. 2023 தை மாதத்தில் அது ரூ.15,970 ஆக உயர்ந்தது. 2024 தை மாதத்தில் ரூ.17,014 ஆக எட்டியது. பின்னர் 2025 தை மாதத்தில் சற்று குறைந்து ரூ.16,334 ஆகவும், 2025 பங்குனியில் ரூ.16,302 ஆகவும் காணப்பட்டது. இவ்வாறான கணக்குகள் வறுமை அளவீட்டின் உயர்வைக் காட்டினாலும், அது மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தரத்தை பிரதிபலிக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இன்று சந்தை விலை உயர்வுகள், உணவு மற்றும் வீட்டு வசதிகளின் செலவுகள், சுகாதார மற்றும் கல்வி செலவுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டால், தற்போதைய வறுமை வரம்பு ஒரு 'உண்மையான தரக் கோலாக' இருக்கிறதா என்ற சந்தேகம் நியாயமானது. பல நிபுணர்கள், உண்மையான வறுமை நிலை அரசின் புள்ளிவிபரங்களைவிட அதிகமாக இருக்கலாம் என்று எச்சரிக்கின்றனர்.

இலங்கையில் சமூக பாதுகாப்பு (welfare) திட்டங்கள் புதிதல்ல. பாரம்பரியமாக வந்துள்ள உணவுக் குறியீட்டு (ration), 'சமுர்த்தி', கல்வி உதவித்தொகை போன்ற பல திட்டங்கள் செயல்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் அரசியலாக்கம், ஊழல், தவறான பயனீடு, திசைதிருப்பப்பட்ட நிதி போன்ற குற்றச்சாட்டுகள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. உண்மையில் அவை வறுமையை ஒழிக்க முடியாமல், மாறாக அரசியல் ஆதாயம் பெறும் கருவிகளாகவே மாறிவிட்டன.

2022க்குப்பின்தொடங்கப்பட்ட 'அஸ்வெசும' (Aswesuma) மற்றும்நலத்திட்ட பயனாளிகள் தகவல் பொறிமுறை (Welfare Benefits Information System – WBIS) போன்ற புதிய முயற்சிகள், தரவுகளின் அடிப்படையில் பயனாளிகளை அடையாளம் காணும் முயற்சிகளாக பாராட்டப்பட்டாலும், அவற்றின் செயற்பாட்டு வலிமை இன்னும் முழுமையடையவில்லை. மக்கள் பெரும்பாலும் தவறாக நீக்கப்பட்டல், நியாயமற்ற வகையில் சேர்க்கப்பட்டல் போன்ற குறைகள் சுட்டிக்காட்டப்பட்டே வருகின்றன.

தற்போதைய அரசு 'அஸ்வெசும'வை தற்காலிகமாகத் தொடர்ந்தாலும், அதன் இடத்தில் புதிய திட்டமாக 'பிரஜா சக்தி' (Praja Shakthi) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டம், வறுமையின்அறிகுறிகளைமட்டுமன்றி அதன் வேர் காரணங்களை ஒழிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உணவுப் பாதுகாப்பு, சந்தைப்படுத்தல் போன்ற கூறுகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருப்பது, முந்தைய முயற்சிகளில் இருந்து ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கல்வியின் பங்கு வெளிப்படையாக வலியுறுத்தப்படுவது பாராட்டத்தக்க முன்னேற்றமாகும்.

ஆனால், திட்டத்தின் முழுமையான தன்மை, செயல்முறை, கணக்கீட்டு அளவுகள் குறித்து இதுவரை போதிய தெளிவுகள் இல்லை. திட்டம் எப்படி செயல்படுத்தப்படும்? யாருக்கு முன்னுரிமை வழங்கப்படும்? நிதி எவ்வாறு நிரந்தரமாக ஒதுக்கப்படும்? என்கிற கேள்விகள் அனைத்துக்கும் அரசாங்கம் இன்னும் உறுதியான விளக்கங்களை வழங்கவில்லை.

வறுமை ஒழிப்பு திட்டங்கள் வெறும் வாக்குறுதிகளாகவே இருக்கக்கூடாது. மக்களுக்கு உண்மையா பயனளிக்க வேண்டுமெனில்:

தரவுத் துல்லியம் – பயனாளிகளை அடையாளம் காணும் முறைகள் தெளிவாகவும், நியாயமாகவும் இருக்க வேண்டும்.

ஊழல் தடுப்பு – அரசியல் அழுத்தங்களிலிருந்து திட்டங்களை விலக்க வேண்டும்.

தெளிவான செயல்முறை – ஒவ்வொரு குடும்பமும் எந்தக் காரணத்திற்காக சேர்க்கப்படுகிறார்கள், எவ்வளவு காலம் உதவி கிடைக்கும் என்பதில் விளக்கம் தேவை.

சமுதாய பங்கு – குடிமக்கள், சமூக அமைப்புகள், உள்ளூராட்சி ஆகியவற்றின் பங்கேற்பு அவசியம்.

நிலைத்தன்மை – வெளிநாட்டு கடன்கள் அல்லது தற்காலிக நிதி ஆதாரங்களில் மட்டுமே சாராமல், நாட்டின் உள்நாட்டு வருவாயிலிருந்து நிரந்தர நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

உலக வங்கி குறிப்பிட்டுள்ளபடி, "pro-poor economic recovery", அதாவது வறிய மக்களின் குடும்ப வருமான வளர்ச்சியை முன்னெடுக்கும் வகையில் பொருளாதார வளர்ச்சி நடைமுறைக்கு வர வேண்டும். வேலை வாய்ப்பு உருவாக்கம், தொழில்முனைவோருக்கு ஊக்குவிப்பு, கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவை வறுமை விகிதங்களை 2030க்குள் 2019 நிலைக்கு மீண்டும் கொண்டுவரக்கூடிய முக்கிய வழிகள்.

இலங்கையில் இன்று வறுமை வெறும் புள்ளிவிவரமல்ல, அது கோடிக்கணக்கான மக்களின் நாளாந்தக் கவலை. "ஒரு சிறு அதிர்ச்சி ஏற்பட்டாலே மீண்டும் வறுமைக்குள் விழும்" நிலைமையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலையில், அரசின் புதிய 'பிரஜா சக்தி' திட்டம் ஒரு நம்பிக்கை ஒளியாகத் தெரிகிறது. ஆனால், அது வெற்றியடைவதற்கான அடிப்படை நிபந்தனை நம்பகத் தன்மை, தெளிவு, நீடித்த நிதி ஆதரவு என்பவையே.

ஆளும்தரப்பு வாக்குறுதிகளில் மட்டுமே நின்று விடாமல், உண்மையான செயற்பாடுகளால் வறிய மக்களின் நம்பிக்கையை மீட்டுக் கொள்ள வேண்டும். இல்லையெனில், கடந்த பத்து ஆண்டுகளில் கிடைத்த முன்னேற்றத்தைப்போலவே, அடுத்த பத்து ஆண்டுகளும் வறுமையின் நிழலில் தொலைந்து போகும் அபாயம் உள்ளது.

# அரச நிதி பற்றிய குழுவிற்கு மத்திய வங்கியை அழையுங்கள்

## சபாநாயகருக்கு தயாசிறி எம்.பி. கடிதம்

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

விரிவாக்கப்பட்ட பண விநியோகம் குறித்த உண்மைகளை முன்வைக்க இலங்கை மத்திய வங்கியை அரச நிதி பற்றிய குழுவுக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தமது கடிதத்தின் ஊடாக கோரியுள்ளார்.

ஆளும்தரப்பு புதிய நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளதாக மனித உரிமைகளுக்கான கேந்திர நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் அண்மையில் அறிக்கை ஒன்றை வெள யிட்டிருந்தார்.

அதனை கடந்த செவ்வாய்க்கிழமை பிரதி நிதியமைச்சர் அனில் ஜயந்த நாடாளுமன்றத்தில் நிராகரித்திருந்தார்.

தற்போதைய காலகாட்டத்தில் எந்தவொரு நாணயஅச்சிடலிலும்ஆளும்தரப்புஈடுபடவில்லை எனவும், அதற்கான சட்டரீதியான அனுமதி அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டினால் விரிவாக்கப்பட்ட பண விநியோகம் மூலமே இந்த பணப்புழக்கம் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே அதன் உண்மைகளை இலங்கை மத்திய வங்கி அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெளவுப்படுத்த வேண்டும்.

ஆளும்தரப்பு மற்றும் நிதியமைச்சின் அனுமதியின்றி புதிய நாணயத்தை இலங்கை மத்திய வங்கி அச்சிட்டு இருக்குமாயின் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவேஇலங்கைமத்தியவங்கியினைஅரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அழைக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நாணயம் அச்சிட்டுத் தீர்க்கமாட்டோம்

## பிரதி அமைச்சர் அனில் பெர்னான்டோ தெரிவிப்பு

நாணயம் அச்சிட்டு வரவு செலவு திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யபோவதில்லை. நாணயம் அச்சிட்டுள்ளதாக போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு நாணயம் அச்சிட்டிருந்தால் பணவீக்கம் சடுதியாக உயர்வடைந்திருக்கும் என தொழில் அமைச்சரும், பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை, நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதானவிவாதத்தில்உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார மீட்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் எதிர்க்கட்சியினர் எதிர்மறையான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். 2025ஆம்ஆண்டுவரவுசெலவுத்திட்டத்தில்இலக்கிடப்பட்ட வருமானம் அடையப்பட்டுள்ளது.

வரி வலையமைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய சுங்கத்திணைக்களம் முதன்முறையாக அதிகளவில் வரி வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளது. இந்த ஆண்டு 2150 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சுங்கத்திணைக்களம் 1316 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது.

நிதி பாய்ச்சல் தொடர்பில் போதிய தெளிவில்லாமல் ஆளும்தரப்புநாணயம் அச்சிட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். 2024 ஆம் ஆண்டு அரசாங்கத்தை பொறுப்பேற்கும்போது நிலைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுகையிருப்பையும்காட்டிலும் தற்போது வெளிநாட்டு கையிருப்பு உயர்வடைந்துள்ளது..

நாணய புழக்கம் மற்றும் நிதி ஸ்திரப்படுத்தலை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை மத்திய வங்கிக்கு உண்டு. ஆளும்தரப்பு 1.7 ரில்லியன் ரூபாய் வரையில் நாணயம் அச்சிடப்பட்டுள்ளதாக எதிர்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு போலியானது.

நாணயம் அச்சிட்டு வரவு செலவு திட்டத் தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யபோவதில்லை. நாணயம் அச்சிட் டுள்ளதாக போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு நாணயம் அச்சிட்டிருந்தால் பணவீக்கம் சடுதியாக உயர்வடைந்திருக்கும் ஆகவே மக்களை தவறாக வழிநடத்துவதை எதிர்க்கட்சிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# 'ஸ்மார்ட் நேஷன்' மாற்றம் தொடர்பில் சிங்கப்பூரில் சஜித் பிரேமதாச ஆராய்வு

டிஜிட்டல் இலங்கைக்கான எதிர்காலத்தை வலுப்படுத்துவதற்கு தேவையான அறிவு மற்றும் மூலோபாய மேம்பாட்டுக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சிங்கப்பூரின் டிஜிட்டல் அபிவிருத்தி மற்றும் தகவல் அமைச்சிற்கு சென்றுள்ளார்.

இலங்கையின் நிர்வாக கட்டமைப்பு, அரசப் பணி உட்பட முழு செயல்பாட்டையும் டிஜிட்டல்மயமாக்குவதற்குத் தேவையான வழிகாட்டுதல்களைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று வியாழக்கிழமை சிங்கப்பூரின் டிஜிட்டல் மேம்பாடு மற்றும் தகவல் அமைச்சிற்கு சென்றுள்ளார்.

இந்த பயணத்தின்போது 'ஸ்மார்ட் நேஷன்' ஆக மாறுவதற்கான சிங்கப்பூரின் முன்னோடி பயணம் பற்றிய விரிவான கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்றார்.

2014 ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் பிரதமர் லீ சியன் லூங்கின் தலைமையில் தொடங்கப்பட்ட ஸ்மார்ட் நேஷன் 1.0 உடன் ஆரம்பமான சிங்கப்பூரின் டிஜிட்டல் உத்தி புரட்சியின் பரிணாம வளர்ச்சி இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதில் அரசாங்கமும் சமுதாயமும் டிஜிட்டல் மாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்த விதம் குறித்து ஆய்வு செய்ய முடிந்தது.

இதில் டிஜிட்டல் புதுமையை வேகப்படுத்துவதற்கும், உள்ளடக்குவதற்கும், விரிவுபடுத்துவதற்கும் மற்றும் அன்றாட வாழ்க்கையில் தொழில்நுட்பத்தை ஆழமாக ஒருங்கிணைப்பதற்கும் முயற்சி செய்யும் பிரதமர் லாரன்ஸ் வொங் 2024 இல் அறிமுகப்படுத்திய இத்திட்டம் பற்றியும் அவர் இதன்போது கலந்துரையாடினார்.

சிங்கப்பூரின் டிஜிட்டல் சூழல் முறைமையை நெறிப்படுத்தும் பல பிரதான நிறுவனங்களின் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது கலந்துரையாடல்களில் எடுத்துக்காட்டினார். மக்கள் மற்றும் வணிகங்களுக்காக டிஜிட்டல் சேவைகளைத் திட்டமிடுதல் மற்றும் வழங்குவதில் மையப் பொறுப்பை வகிக்கும் கௌவ்டெக்கின் செயல்பாடுகள் மீது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை தனது அரசப் பணி வழங்கலை நவீனப்படுத்தவும், தொழில்நுட்பம் அடிப்படையிலான ஆட்சியைத் தழுவவும் முயற்சிக்கும் போது, தேசிய டிஜிட்டல் அடையாள முறைமைகளில் இருந்து செயற்கை நுண்ணறிவு இயக்கும் அரசாங்க தளங்கள் வரை அதன் முன்முயற்சிகள் இலங்கைக்கு மதிப்புமிக்க கற்றுக்கொண்ட பாடங்களைப் பெற்றுக் கொடுக்கும் என்று எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# தன் தலையில் மண்

**என். சத்திய மூர்த்தி**



திங்கள் அன்று நடந்தேறிய தமிழ் பிரதேசங்கள் தழுவிய முழு கடையடைப்பு போராட்டம், வெற்றியா, தோல்வியா, என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், அதுவே அடுத்து நடக்கவிருக்கும் மாகாண சபை தேர்தல்களுக்கு பல்வேறு தமிழ் பேசும் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு புதிய அரசியல் அணிக்கு அச்சாரம் போட்டு இருக்கிறது எனலாம். இது, வரவேற்கதக்க விடயம். ஆனால், அதுவே எளிதாக செயல்படுத்தப்படகூடிய விடயம் அல்ல. இதற்கான தியாகங்களை அனைத்துத் தரப்பினரும் ஒரு சேர செய்தால் மட்டுமே, தேசிய அளவில், தென்னிலங்கையை நிமிர்ந்து பார்க்கச் செய்யமுடியும்.

இந்தக் கதவடைப்பிற்கு அழைப்பு விடுத்தது என்னவோ, தமிழ் அரசுக் கட்சிதான். சரியாகச் சிந்தித்து செயல்படாததால், கதவடைப்பு நாளை முதலில் மாற்றி, பின்னர் முழு நாள் கடையடைப்பை பாதியாக குறைக்க வேண்டிய குளறுபடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அனைத்துத் தரப்பினரையும் கலந்து ஆலோசித்துவிட்டு கடையடைப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தால், அந்த முயற்சி அதிக வெற்றி அடைந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மாறாக, முதலில் கடையடைப்பு குறித்து ஒரு தலைபட்சமாக அறிவித்துவிட்டு, பின்னர் பிற கட்சித் தலைமைகள் மற்றும் முஸ்லிம், மலையக தமிழர்கள் தலைமைகளின் ஆதரவைக் கோரியது, பெரிய அண்ணன் தனமாகவே பார்க்கப்படுகிறது. என்ன, அந்த தமிழ் கட்சிகளில் சில, தமிழ் அரசுடன் மாகாண சபை தேர்தலில் கூட்டு வைத்தால் மட்டுமே, கரையேறுவோம் என்ற நிலையில் உள்ளன. எனவே, தலையசைத்தன.

## வழமையான முயற்சி

முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் மலையக தமிழ் கட்சிகளும் கூட, மாகாண சபை தேர்தலை குறிவைத்தே கதவடைப்புப் ஆதரவு தெரிவித்தாலும், அவர்களின் எண்ணவோட்டத்தில் அனைத்துத் தமிழர் தரப்பும் ஒரு சேரப் பயணிக்கவேண்டும் என்ற ஆர்வமும் அவ்வப்போது வெளிப்பட்டு வந்துள்ளது. ஆனால், அது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது குறித்த சந்தேகம் அவர்களுக்கும் உள்ளது.

இவர்களில், முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் அரசு உள்ளிட்ட தமிழ் கட்சிகளின் உதவியோடு கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் பதவியை தனதாக்கிக்கொள்ள கணக்கிடுகிறது. இது வழமையான, வெற்றிக்கான முயற்சியே. அதனை தமிழ் அரசு உள்ளிட்ட தமிழ் கட்சிகள் ஒதுக்கித் தள்ளிவிடக்கூடாது. அது போன்றே, தங்களுக்கே முதலமைச்சர் பதவி வேண்டும் என்றும் தமிழ் அரசு முருங்கை மரம் ஏறக்கூடாது.

மலையகத் தமிழர் தரப்புகளை பொறுத்தவரையில், அவர்களுடைய நுவரெலியா, பதுளை மாவட்டங்களில், வடக்கு-கிழக்கு இலங்கை தமிழ் சமூகத்தினர் அதிக எண்ணிக்கையில் வசிக்கவில்லை. அதேசமயம், தலைநகர் கொழும்பு மாநகரில் வெள்ளவத்தை போன்ற பகுதிகளில் வசிக்கும் இலங்கை தமிழ் மக்களின் வாக்கு தேவைபடுகிறது.

ஐக்கிய தேசிய கட்சி அல்லது அதிலிருந்து உடைந்து வலிமையான எதிர்கட்சியாக உருவெடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய தென்னிலங்கை கட்சிகளுக்கு ஆதரவாக அப்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பு தென்னிலங்கையில் வேட்பாளர்களை களமிறக்கவில்லை. இதன் காரணமாகவும், அந்த தென்னிலங்கை கட்சிகள் தலைமைத்துவம் நல்கிய கூட்டணியில் அங்கம் வகித்த மலையக தமிழ் கட்சிகளுக்கு வெள்ளவத்தை வாக்குகள் விழுந்தன.

தற்போது, அந்த வாக்குகளை மனதில் நிறுத்தி, மனோ கணேசன் தலைமையிலான மலையக தமிழர் கூட்டணி வடக்கு-கிழக்கு கடையடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது. அதேசமயம், கடந்த மாகாண சபை தேர்தல் காலத்தில் மனோ கணேசன் கூறியது போல், வடக்கிலும் அவரது அணியினருக்கு இடம் ஒதுக்கவேண்டும் என்பது போன்ற கோரிக்கையை இந்த முறையும் தமிழ் கட்சிகள் ஏற்காது என்று எதிர்பார்க்கலாம்.

என்றாலும், தமிழ் அரசு கட்சியில் இருந்து பிரிந்து சென்ற, கொழும்பு நகரை வதிப்பிடமாக கொண்டுள்ள தவராசா குழுவினர் இந்த முறை மேற்கு மாகாண சபைக்கு வேட்பாளர்களை களமிறக்கலாம். அவ்வாறு நடந்தால், மலையகக் கட்சிகளின் நிலைபாடு எவ்வாறாக இருக்கும் என்ற கேள்வியும் எழுகிறது. அடிமனதில் என்னவோ, அவர்கள் தமிழ் அரசு அணியின் ஆதரவையே கோரிப் பெறுவார்கள் என்ற நிலமையே உள்ளது.

## உள்கட்சி பூசல்

மற்றபடி, இந்தக் கதவடைப்புத் திருவிழாவும், தமிழ் தரப்பினரின் உள்கட்சி பூசல்களை வெளிக்கொணர்வதாகவே இருந்தது. தமிழ் அரசு கட்சி செயலாளர் சுமந்திரன், தலைவர் சிவஞானம் ஆகியோரது கூற்றுப்படியே, யாழ்பாண நகரில் எதிர்பார்த்த அளவிற்கு கதவடைப்பு வெற்றி பெறவில்லை. மற்றப் பகுதிகளில் வெற்றி, பெருவெற்றி என்றெல்லாம் கூறப்பட்டாலும் அதுவும் சந்தேகத்திற்குரியதுதான். இதுவே, கிழக்கு மகாணத்தில் கடையடைப்பு வெற்றி குறித்து சாணக்கியனின் கூற்றிற்கும் பொருந்தும்.

பத்திரிகைச் செய்திகளை வைத்து பார்க்கும்போதுகூட தமிழ் அரசு கட்சி அரசியலில் சிறீதரன் தலைமைத்துவம் வழங்கும் கிளிநொச்சி பகுதியில் கதவடைப்பு வெற்றி அடைந்தது என்ற செய்தி, கட்சியின் தலைமைக்கே வயிற்றில் புளியை கரைக்கும்.

அது போன்று, வடக்கு மாகாணத்தில் பிற பகுதிகளில் கடையடைப்பு வெற்றி என்று கூறும்போது, அது குறித்த பாராட்டு யாரை சென்றடைய வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

அந்த விதத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில், தங்களுக்கு அதிகப்படியான உள்ளாட்சி அமைப்புகளில் தலைமைத்துவம் கிடைத்துள்ளதால், அதனை பயன்படுத்தி, கதவடைப்பு போன்ற போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி விடலாம் என்ற தமிழ் அரசு தலைமையின் கணக்கு தவறாகிவிட்டது. தமிழ் அரசுக்கு மக்கள் வாக்களித்தது, அதற்கு ஆதரவு தெரித்து மட்டுமே அல்ல. பிற தமிழ் கட்சிகளின் செயல்பாடு தமிழ் அரசை விட மோசமாக இருப்பதாலும்தான்.

என்ன, நாடாளுமன்ற தேர்தலில் யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக யாழ்பாண வருவாய் மாவட்டம் மற்றும் நகர பகுதியில், தென்னிலங்கை கட்சியான ஆளும் ஜேவிபி அதிக அளவில் ஆசனங்களையும் வாக்கு சதவீதத்தையும் பெற்றது தமிழ் சமூகத்திற்கு இழுக்காகப் பார்க்கப்பட்டது. பல்வேறு தமிழ் கட்சிகளும், தமிழ் மக்கள் தற்கொலை பாதையில் பயணிக்கிறார்கள் என்ற வகையில் உணர்வுபூர்வ, உணர்ச்சிபூர்வ பரப்புரைகளை மேற்கொண்டார்கள். இதுவே உள்ளாட்சித் தேர்தலில் தமிழ் அரசின் வெற்றிக்குக் காரணம்.

இது உண்மை என்றால், தற்போதைய கதவடைப்பு வெற்றி பெறாததற்கு, இன்னும் யாழ்பாண வருவாய் மாவட்டத்தில் தமிழ் கட்சிகளின் ஆளுமை திரும்பவில்லை என்பது காரணமா? அல்லது ஆளும் ஜேவிபி-யின் கொடி பறக்கிறது என்பது காரணமா? எது எப்படி இருந்தாலும், தமிழ் மக்கள் மேலும் ஒரு முறை உணர்ச்சிபூர்வ தேர்தல் பரப்புரைக்கு விழுந்துவிடமாட்டார்கள் என்றே எண்ண தோன்றுகிறது.

இதனால் மட்டுமே, தமிழர்கள் ஆளும் தரப்பினருக்கு மீண்டும் ஒருமுறை வாக்களிப்பார்களா? குறிப்பாக வட மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை அவர்களிடம் அடகு வைத்து விடுவார்களா? இந்தக் கேள்விக்கும் தற்போது பதில் இல்லை. ஆனால், அனைத்து தமிழ் தரப்பினரும் இன்று தொடங்கி ஒரு சேரப் பயணித்து, அவ்வாறு எதிர்காலத்திலும் ஒற்றுமையாக இருப்போம் என்று வாக்காளர்களிடம் நம்பிக்கையை விதைத்தால், அதனால் மீண்டும் ஒரு முறை இடைகால வெற்றி கிடைக்கலாம். அதனைத் தக்க வைத்துக்கொள்வதும் தொலைப்பதும் தமிழ் அரசியல் தலைமைகளிடமே இருக்கிறது.

## ஒருமைப்பாடு


இதற்கிடையில், மழைஓய்ந்தும்தூவனம்நிற்கவில்லை என்ற கதையாக, கதவடைப்பு நாள் வந்து சென்ற பிறகும் அது குறித்த சமூக ஊடகங்களில் அலசல்கள் நின்றபாடில்லை. குறிப்பாக, மடு தேவாலயத்தில் திருவிழா என்ற காரணத்தினால், முதலில் குறிக்கப்பட்ட ஒகஸ்ட் 15, கதவடைப்பைத் தள்ளி வைத்த சுமந்திரன் தரப்பினர், யாழ்பாணம் நல்லூர் கந்தனின் ஆண்டு திருவிழாவை கண்டுகொள்ளாமல் விட்டது ஏன், என்று கேள்வி எழுந்துள்ளது.

இது முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ் மக்களிடையேயான மத ஒருமைப்பாட்டை குலைப்பதாக இருக்கிறது. 1990இ-ல் விடுதலை புலிகள் அமைப்பு, யாழ்பாண முஸ்லீம் மக்களை வெறும் கையோடு வீட்டிற்கு அனுப்பியது. அதுபோன்றே, கிழக்கு மாகாணத்தில், பள்ளிவாசல்களில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த முஸ்லீம் பெருமக்களை கண்மண் தெரியாமல் சுட்டுக் கொன்றது.

என்றாலும், மிதவாத முஸ்லீம் தலைமைகள், இனப்போர் முடிந்த காலகட்டம் தொடங்கி, தமிழ் தலைமைகளுடன் இணக்கப்பாடு அரசியலே செய்துவந்துள்ளார்கள். காரணம் எதுவாக இருந்தாலும், அதுவே தற்போதும் தொடர்கிறது. அந்த நிலையில் இப்போது புதிதாக வேறொரு மதப் பிரச்சினையை விதைப்பது எத்தனை தூரம் எடுபடும், பயன்படும்என்பதெல்லாம் பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயம்.

அதேசமயம், தமிழர் தரப்பில் மத அரசியல் புகுந்து விளையாடுவதையும் மறுக்க முடியாது. தற்போதைய கதவடைப்புக்கு எதிராக இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தொடர்ந்து குரல் கொடுத்தது,





ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விடயம் அல்ல. இரண்டு-மூன்று வருடங்களுக்கு முன் அரங்கேறி தற்போது மறக்கப்பட்டுவிட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் அனைத்து மதங்களின் குருமார்களையும் முன் வரிசையில் அணிவகுக்க செய்ததும் ஏற்புடையது அல்ல. அதிலும் குறிப்பாக, வேலன் சுவாமிகள் போன்றோர் ஒரு சமூக போராட்டத்தை மதத்தை பயன்படுத்தி அரசியலில் துடாலடியாக முன்னேற முனைந்ததும் வருந்தத்தக்கது.

அது போன்றே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்பாண உள்ளாட்சி அமைப்பு மேயருக்கான இடைகாலத் தேர்தலில் தமிழ் அரசு தரப்பில் போட்டியிடப் போவதாக அறியப்பட்ட ஆர்னால்ட், கத்தோலிக்க ஆயர் அறிவுறுத்தலின் காரணமாக மட்டுமே தான் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். அவருடைய இடத்தில், ஆயர் அனுகிரகித்த வேறொரு கத்தோலிக்க வேட்பாளர் களமிறங்கினாலும், அவரால் வெற்றிபெற முடியவில்லை என்பது வேறு விடயம்.

## மூளை சலவை

இது இப்படியென்றால், அடுத்தடுத்து அனைத்துத் தமிழர் போராட்டங்களிலும் கத்தோலிக்க திருச்சபை மற்றும் குருமார்கள் முன்னிலை வகிப்பதும் எந்த விதத்தில் நியாயம்? அவர்கள் மக்களின் கருத்தையே பிரதிபலிப்பதாக கூறினாலும், உண்மை என்னவோ, அவர்களுடைய கருத்தையே அந்தந்தப் பகுதியில் உள்ள கத்தோலிக்க கிறித்துவ மக்கள் முன்னெடுக்க மத ரீதியாக மூளைச் சலவை செய்யப்படுகிறார்கள் என்ற கருத்திலும் உண்மை உண்டு.

தற்போது மன்னார் பகுதியில், காற்றாலை மற்றும் கனிம மண் சுரண்டல் ஆகிய பிரச்சினைகளை முன்வைத்து நடைபெறும் மக்கள் போராட்டத்தில், கத்தோலிக்க ஆயர்களே முன்னிலை வகிக்கிறார்கள். இனப்பிரச்சினை தொடங்கிய காலம் தொட்டு அவர்கள் இது போன்ற பங்களிப்பைச் செய்திருந்தாலும், அன்றைய மிதவாதத் தமிழ் தலைமை, பின்னர் விடுதலை புலிகள் அமைப்பின் ஆளுமை தற்போதைய தமிழ் தலைமைகளிடம் இல்லை.

இது ஒரு புறமிருக்க, மன்னார் ஆயர் ஞானபிரகாசம் ஆண்டகை, தன் பங்கிற்கு 'சேம் சைட் கோல்' அடித்திருக்கிறார். இரண்டு தினங்களுக்கு முன் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவைச் சந்தித்த அவர், மன்னார் பொது மருத்துவனையை மத்திய அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும், என்று கோரிக்கை விடுத்தார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் செய்தி உண்மை என்றால், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் தமிழர் தரப்பிற்கு கிடைத்த அதிகாரங்களில் மிச்ச-சொச்சத்தையும் மத்திய அரசே எடுத்துக்கொள்ளட்டும் என்று, ஞானபிரகாசம் ஆண்டகை கோரி உள்ளார் என்பதே பொருள். இது முழுவதுமாக, அரசியல் சார்ந்த விடயம். இதில் நேரடியாக மத குருமார்கள் தலையிட அவர்கள் என்ன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளா, என்ன?

இந்த வேகத்தில் பயணித்தால், தமிழர் பிரச்சினை என்பது ஒரு கட்டத்திற்கு பின் மதப்பிரச்சினை என்று உருவெடுத்து, அதிலிருந்து சாதிப்பிரச்சினையாகக்கூட உருமாறலாம். தற்போது, இதனை அறியாமல், மதத்தின் பெயரால் கிடைக்கும் ஆதரவுகளில் குளிர்காய நினைத்தால், அதுவே, யானை - அல்லது யானைக் குட்டி- தன் தலையிலேயே மண்ணை வாரி போட்டுக் கொள்வதற்குச் சமம்.

## தலையீடற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.இவ்விடயம்தொடர்பில் கடந்த 14ஆம்திகதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன்,கே.குருபரன், வி.மணி வண்ணன் ஆகியோரால் நீதிமன்றிலும் முறையீடுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 1999 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமல்போனோர் குறித்து விசாரிக்க இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவினால் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில்இ கே.எச்.கமிலஸ் பெர்னான்டோ,ஜெஸிமா ஸ்மாயில், சி.எம்.இக்பால் ஆகியநால்வர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. குறித்த விசாரணைக் குழுவினால் 210பக்கங்களைக்கொண்டநீண்டவிசாரணை அறிக்கை கடந்த 2003 ஒக்டோபர் 28ஆம் திகதி வெளியிடப்பட்டது.அவ்வறிக்கையில் காணாமல்போனவர்களில் பெருமளவானோர் இராணுவத்தினால் கொல்லப்பட்டிருக்கலாமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், படுகொலையுடன் தொடர்புடைய இராணுவமுகாம்கள், இராணுவ அதிகாரிகள், இராணவத்தினரின் பெயர்களும் அவ்வறிக்ஷயில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.எனவே இந்த மனிதப் புதைகுழி விசாரணைகள்மும்முரமாகஇடம்பெறும்போது அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய படையினர்தப்பியோடவாய்ப்புள்ளது. ஆகவே அதற்குமுன்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செம்மணி இராணுவசோதனைச்சாவடியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலைவழக்கில் குற்றவாளிகளாகஇனங்காணப்பட்டஇராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச உட்பட ஆறு இராணுவத்தினருக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம்கடந்த1998ஆம்ஆண்டுசெப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி மரணதண்டனை வழங்கியிருந்தது. நீதிமன்றத்தின் இந்தத்தீர்ப்பையடுத்துஇ இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச செம்மணியில் 300தொடக்கம் 400வரையான மக்கள் கொன்றுகுவிக்கப்பட்டதாக நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.இவ்வாறு சோமரத்ன ராஜபக்சநீதிமன்றில்சாட்சியமளித்ததற்கமைய அப்போதுமேற்கொள்ளப்பட்டவிசாரணைகள்இ அதனைத்தொடர்ந்து செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகளில் 15 எலும்புக்கூட்டுத்தொகுதிகளும் மீட்கப்பட்டிருந்தன.பின்னர்இந்தவிசாரணைகள்கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து இதுதொடர்பான வழக்குவிசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்நிலையில் இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச அப்போது நீதிமன்றிற்கு வழங்கிய சாட்சியத்தை ஆதாரப்படுத்தும்வகையில் தற்போது செம்மணியில் மனித எலும்புக்கூடுகள் மிக அதிகளவில்இனங்காணப்படுகின்றன.எனவே குறித்த வழக்குமீள எடுத்தக்கொள்ளப்பட்டு தற்போதைய மனிதப்புதைகுழி வழக்குடன் தொடர்புபடுத்தப்படவேண்டும். யாழ் நீதவான் நீதிமன்ற வழக்கேட்டிலிருந்து கொழும்பு நீதிமன்றுக்கு அனுப்பப்பட்ட பி2899 என்னும் வழக்கு மீளவும் யாழ்ப்பாணம் நீதிமன்றிற்கு பாரப்படுத்த நடவடிக்கை .

இத்தகைய சூழலில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப் படும்பட்சத்தில் கடந்த 1996காலப்பகுதயில் செம்மணிதொடக்கம்துண்டிஇராணுவமுகாம் வரை இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல படுகொலைகள், பலசேனா தலைமையகம் முதல் இராணுவத்தால் சித்திரவதைக்கூடங்கள் நடத்தப்பட்ட விதம்பற்றிய விபரங்கள், மணியம்தோட்டம் பகுதியிலுள்ள புதைகுழி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் சாட்சியமளிக்க தயாராக இருப்பதாக அண்மையில் இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச தெரிவித்துள்ளார். அப்போதைய அரசுத் தலைவர் சந்திரிக்கா , அப்போதைய பாதுகாப்புச்செயலர் உள்ளிட்டதரப்பினரும் இத்தகைய வதைமுகாம்கள்தொடர்பில் அறிந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலப்பகுதியில் இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களாக 7ஆவதுபடைத்தலைமையகத்தின்புலனாய்வு அதிகாரிகளான கப்டன் லலித் ஹேவாகே, கப்டன் பெரேரா, லெப்டினன்ட் துடுகல, லெப்டினன்ட் உதயகுமார ஆகியோருடன் பொலிஸ் பரிசோதகர்களான அப்துல் ஹமீட் நஸார், சமரசிங்க ஆகியோரின் பெயர்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.எனவே இந்த செம்மணி சிந்துபாத்தி மனிதப்புதைகுழிக்கு விவகாரத்திற்கு தலையீடுகளற்ற சுயாதீன சர்வதேச நீதிவிசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். அந்த சர்வதேச நீதிவிசாரணைகளில் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் சாட்சியங்களும்பெறப்படவேண்டும்.அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற சர்வதேச நீதிவிசாரணைக்கு இந்த அரசானது தனது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும். சர்வதேச நீதிவிசாரணைமாத்திரமே பாதிக்கப்பட்ட எமது தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் ஒரே மார்க்கமாக அமையும். மேலும் கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழிவிவகாரத்திற்கும்சர்வதேசநீதிவிசாரணை என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை, நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தரிவித்ததாவது:

நடுத்தர மக்களின் வாகன கொள்வனவு இலக்கு வெறும் கனவாக மாறியுள்ளது. அதீத வரியினால் சாதாரண வாகனத்தை கூட கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.வாகன கொள்வனவு தொடர்பில் தேசிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளது.

பல கோரிக்கைகளை முன்வைத்து தபால் சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ஆளும்தரப்பு ஒன்றை குறிப்பிடுகிறது. தொழிற்சங்கத்தினர் பிறிதொன்றை குறிப்பிடுகின்றனர். ஆகவே இவ்விடயத்தில் ஆளும்தரப்பு வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும். அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு அரசசேவையாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்; ஆகவே ஆளும்தரப்பு அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும்.

கஞ்சா பயிர்ச்செய்கைக்கு ஆளும்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதை தனிப்பட்ட முறையில் வரவேற்கிறேன். பொருளாதார மீட்சிக்கு ஒருசில முற்போக்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களில் இருந்து ஆளும்தரப்பு விலகியுள்ளமை சிறந்தது. கஞ்சா பயிர்ச்செய்கைக்கு மீரிகம பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளமை பொருத்தமற்றது. முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு சொந்தமான பிறிதொரு பகுதியை ஆளும்தரப்பு தெரிவு செய்ய வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. மாகாணசபைத்தேர்தலைநடத்துவதாகஅரசுத் தலைவர் வாக்குறுதியளித்தார்.எதிர்வரும் மாதத்துடன் அரசுத் தலைவர் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய சாதகமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை நடத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு அரசியலமைப்பு ரீதியிலான நிர்வாக அதிகாரங்களை வழங்க வேண்டும். ஏனைய வாக்குறுதிகளை போன்று மாகாண சபைத் தேர்தல் வாக்குறுதியையும் ஆளும்தரப்பு பொய்யாக்க கூடாது என்றார்.

## தபால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படுகிறது.

மேலதிக வேலை நேர கொடுப்பனவு மற்றும் கைவிரல் ரேகைப் பதிவு உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இவ்வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஐக்கியதேசியதபால்சேவைசங்கம், இலங்கை சுதந்திர தபால் மற்றும் தொலை தொடர்பாடல் சேவை சங்கம், ஐக்கிய தபால் மற்றும் மின் தபால் பரிமாற்ற சேவை சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர தபால் சேவை சங்கம், ஸ்ரீலங்கா தபால் சேவை முன்னணி உள்ளிட்ட 23 தொழிற்சங்கங்கள் இவ்வாறு தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

அந்தவகையில்நேற்றையதினமும்மத்திய தபால் பரிமாற்ற சேவை மூடப்பட்டிருந்தது. பதுளை, காலி, அநுராதபுரம், குருணாகல் உள்ளிட்ட மாவட்டங்களில் பிரதான தபாலகங்களின் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதி தபால் மா அதிபர் சமிஷா டி சில்வா, இந்த வேலை நிறுத்தம் காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். பொது மக்கள் மாத்திரமின்றி முழு தபால் சேவையும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

எனவே இதுவரை பணிக்கு சமூகமளிக்காதோர் இன்றாவது பணிக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அவ்வாறில்லை எனில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த நாட்களில் சுமார் 100 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள், பொதிகளும் தேங்கியுள்ளன. அவை தற்போது பொறுப்பேற்கப்பட்டுள்ள போதிலும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமலுள்ளது எனவே கூடிய விரைவில் பணிக்கு திரும்புமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

எவ்வாறிருப்பினும் தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள நியாயமான கோரிக்கைகளைமறைத்துகைவிரல்ரேகைப் பதிவுக்குஎதிர்ப்புதெரிவித்தும்மேலதிகவேலை நேர கொடுப்பனவுக்காகவும் மாத்திரமே நாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக ஆளும்தரப்பு மக்கள் மத்தியில் தவறான கருத்தினைப் பரப்புவதாக தொழிற்சங்கங்கள் குற்றஞ்சுமத்தியுள்ளன. எவ்வாறிருப்பினும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை வேலை நிறுத்தத்தைக் கைவிடப் போவதில்லைதொழிற்சங்கங்களும்ஸ்திரமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளர் சான்ட்ரா பெரேராவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தது.

## அரசுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம், 'அரசுத் தலைவர் களின் உரித்துரிமைகள்(நீக்குதல்)' எனும் சட்டமூலம்தொடர்பாக உயர்நீதிமன்றத்திற்கு 3 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கடந்த செவ்வாய்க்கிழமை சபாநாயகர் சபைக்கு அறிவித்த நிலையிலேயே உயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் மூன்று மனுக்களின் பிரதிகள் தனக்குக் கிடைத்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று வியாழக்கிழமை சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போது ' 'அரசுத் தலைவர் களின் உரித்துரிமைகள்(நீக்குதல்)' சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்துக்குமேலதிகமாக3மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பிரதிகள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சபைக்கு அறிவித்தார்.

## விமான சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றில் கடந்த காலங்களில் நடந்த ஊழல் மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரிக்க அரசுத் தலைவர் விசேட விசாரணைக் குழு நிறுவப்பட்டது.

அதன்படி விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்மற்றும்ஸ்ரீலங்கன்விமானசேவை ஆகியவற்றின் ஊழியர்கள் பொதுமக்கள் உள்ளிட்டதரப்பினரிடமிருந்து முறைப்பாடுகள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற குழு எதிர்பார்க்கின்றது.

இது தொடர்பில் ஆர்வமுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் 2025 செப்டெம்பர் 05 ஆம் திகதிக்கு முன்னர் psicairport@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது 070-3307700 என்ற Whatsapp எண்ணுக்கு தமது கோரிக்கைகளை அனுப்பி திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்யுமாறு அரசுத் தலைவர் விசேட விசாரணைக் குழு கேட்டுக்கொள்கிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## மகிழ்ச்சி பெருக்கும் நல்லூர்ப் பெருமணம்

கல்யாணம் என்றால் மகிழ்ச்சியையும் மங்கலத்தையும் குறிக்கிறது. அந்த வகையில் நல்லூர்ப் பெருவிழாவின் நிறை மங்கல நிகழ்வாக திருக்கல்யாண வைபவம் நிகழ்கிறது.

ஆவணி அமாவாசையில் தீர்த்த உத்ஸவம் நிகழ்ந்த பின் மறுநாள் வளர்பிறையின் முதல்நாளில் திருக்கல்யாண வைபவம் இங்கு நடக்கிறது.

எங்கள் முருகனுக்குக் கல்யாணம் என்று ஊரே கூடிக் களிக்கும் திருநாள் இது. அது என்ன? இந்த அண்ட சராசரமெலாம் படைத்த பெருமானுக்கும் பிராட்டிக்கும் கல்யாணம்? என்று நீங்கள் கேட்கலாம்.

இது நாங்கள் எங்கள் அன்பினால் செய்யும் நிகழ்வு. ஆக, நீங்கள் உங்கள் பேராவல் காரணமாகச் செய்யும் நிகழ்வு தானா? என்று கேட்டால், அது மட்டுமல்ல ஆகமங்கள், சாஸ்திர நூல்கள் கூட கல்யாணோத்ஸவத்தைச் சிறப்பாகப் பேசுகின்றன.

கல்யாணோத்ஸவத்தை வேத சிவாகம விதிப்படி செய்வோருக்கு இறைவன் எல்லா வித விருப்பங்களையும் நிறைவேற்றுவான் என்றும் அவை சொல்கின்றன.

சாதாரண உலக வழக்கில் சொல்வதானால், பெரியவர்களுக்கு நாம் செய்யும் அறுபதாம் கல்யாணம் போல இந்த உலகெலாம் படைத்த இறைவனுக்கு உயிர்கள் செய்யும் நிகழ்வு என்று சொல்லலாம். ஆனால் அதை விட இது பன்மடங்கு சிறப்பானது.

உண்மையில் இறைவனும் இறைவியரும் வேறு வேறு நபர்கள் அல்ல. அவனது அருட்சக்தியே தேவியர் ஆவர். அவர்கள் சொல்லும் பொருளும் போல இணைந்தவர்கள் என்கிறார் காளிதாசர்.

நம் மண்ணின் கலாசாரமான கந்தபுராணம் கல்யாண காப்பியம். அது தொடங்கும் போதே பார்வதி கல்யாணத்தில் தொடங்குகிறது. நடுவே தெய்வானை அம்மை திருமணம் முதலிய திருமணங்கள் நிகழ்கின்றன. நிறைவாக வள்ளி கல்யாணத்தோடு புராணம் பூர்த்தியாகிறது.



இவ்வாறு பல வகையிலும் சிறப்புடைய கல்யாணோத்ஸவம் நல்லூரில் நிகழ்கிறது. இவ்வேளையில் நல்லை மண்ணின் அடையாளமான கந்தபுராணம் பேசும் கல்யாண வைபவ பாடல்களை பாடிப்பரவுவதும் சிறப்புடையதாகும்.

அவ்வகையில் வள்ளியம்மையை முருகனுக்கு கன்னிகாதானம் செய்து பாணிக்கிரஹணம் என்ற தேவி கையை சுவாமி பற்றுகிற காட்சியை புராணம் சொல்கிறது.

அந்த நல் வேளை தன்னில்
அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னில்
கன்னிகை கரத்தை நல்கி
நந்தவமாகி வந்த மங்கையை
நயப்பாய் இன்று
தந்தனன் கொள்க என்று
தண்புனல் தாரை உய்த்தான்
(கந்தபுராணம் – வள்ளி திருமணப்படலம்– 199)

அது போல தேவசேனா தேவிக்கு சுவாமி திருமாங்கல்யதாரணம் என்ற தாலி அணிவித்த நிகழ்வை புராணம் சொல்கிறது.

செங்கமலத்து இறை சிந்தையில் ஆற்றி
அங்கையின் ஈந்திட ஆண்டகை கொண்ட
மங்கல நாணை மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கொர் நறுந்தொடை சூழ்ந்தான்
(தெய்வானையம்மை திருமணப்படலம் – 247)

திருக்கல்யாண வைபவத்தில் நிகழும் விவாக ஹோம வைபவத்தையும் புராணம் சொல்கிறது.

ஆயது போழ்தினில் அம்புயமுற்றோன்
காயெரி தந்து கலப்பைகள் கூறி
தூய மணம் புரி தொன்முறை வேள்வி
நாயகனைக் கொடு நன்று செய்வித்தான்
(தெய்வானையம்மை திருமணப்படலம்– 251)

இது மட்டுமல்ல, இப்போது பலர் பல புரட்சி கருத்துக்களை சொல்கிறார்கள். ஆனால், கந்தபுராணம் வைதிக சைவ மரபுப்படி

அக்னி வலம் செய்தல், அம்மி மிதித்தல் ஆகியவற்றை இறைவனே செய்ததாகச் சொல்கிறது.

உலகருள் காரணன் ஒண்ணுதலோடும்
வலமுறையாக வயங்கனல் சூழ்ந்து
சிலையிடை அன்னவன் சீறடி தந்தான்
மலரவன் உச்சியின் மேலடி வைத்தான்
(தெய்வானையம்மை திருமணப்படலம்– 252)

ஆகவே, இன்று திருமணக்கோலத்தோடு நல்லூர்ப்பெருமணத்தில் காட்சி தரும் ஸ்ரீ வல்லீ தேவசேனா சமேத கர்பூர தியாக வசந்த கோலாகல மூர்த்தியான செல்வ முத்துக்குமார ஸ்கந்த சுவாமி எம் எல்லோருக்கும் இந்திரராகிப் பார் மேல் இன்பமுற்றினிது மேவி சிந்தையில் நினைந்த முக்தி சிவகதி சேரவும் பேரருள் செய்ய பிரார்த்திப்போம்.

நீர்வை. சிவஸ்ரீ. தி.மயூரகிரிக்குருக்கள்,




புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
46, Brodie Lane , Jaffna.

காலைக்கதிர்
Kalaikkathir

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிரகாரிக்காமல் விவாதிக்க முன்வருக

## அஜித் பி பெரேரா எம்.பி. கோரிக்கை

பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை, விவாதிக்கப்படாமலே சபாநாயகரால் நிராகரிக்கப்படும் என சில ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நம்பிக்கையில்லா பிரேரணயை கொண்டுவரும் உரிமையை நிராகரிக்காமல், அதன் உள்ளடக்கம் தொடர்பில் விவாதிப்பதற்கு ஆளும்தரப்பு முன்வர வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான விவதாத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் உள்ளிட்ட அமைச்சர். பிரதி அமைச்சர், இராஜாங்க அமைச்சர்கள் நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற அடிப்படை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த பொறுப்புக்களை பரிசீலிக்கும் ஒருமுறைதான் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவதாகும். இதற்கு முன்னர் இந்த நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு எதிராகவும், பிரதமருக்கு எதிராகவும் சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதேபோன்று 1981இல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்துக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டிருந்தது. அவர் நாடாளுமன்றத்தில் ஒரு பதவியை வகித்தவர்.

அந்தவகையில், பிரதி அமைச்சரும் இராஜாங்க அமைச்சரும் இந்த நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையின் கீழ் கேள்விக்குட்படுத்துப்பட வேண்டும்.

எதிர்க்கட்சியினால் முறையாக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று கொண்டுவர முடியாது, நிலையியற் கட்டளைகளில் அவ்வாறு எதுவும் இல்லை என்று ஊடகங்கள் மூலம் பாரிய பிரசாரம் இடம்பெற்று வருகிறது. ஆனால் நிலையிற் கட்டளையில் அமைச்சருக்கு எதிரான, அரசாங்கத்து கு எதிரான, பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை அல்லது குற்றப்பிரேரணை தொடர்பில் எங்கும் தெரிவிக்கப்பட்டதில்லை.

அப்படியிருக்கையில் பிரதி அமைச்சருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை, விவாதிக்கப்படாமலே சபாநாயகரால் நிராகரிக்கப்படும் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டதாகசிங்களஊடகம்ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சபாநாகர் இந்த விடயத்தை தெரிவித்திருப்பார் என நாங்கள் நம்புவதில்லை. அப்படியில்லாவிட்டால், அரசாங்கத்தில் யாராவது தெரிவித்திருக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட் டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்காத நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான சாட்சிகளை மறைத்தார் என்றும் விசாரணைகளை தாமதுப்படுத்த நடவடிக்கை எடுத்துவந்தார் என குற்றச்சாட்டு தெரிவிக்கப்படும் ஒருவர், நாட்டின் பிரதி பாதுகாப்பு அமைச்சுப்பதவி வகிப்பது தொடர்பில் கேள்வி எழுப்ப, நாடாளுமன்றத்துக்கு நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவரும்போது, அந்த நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதிக்காமல் நிராாரிப்பதற்கான தேவை இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது.

அதனால் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை விவாதிக்காமல் ஏதாவது காரணம் ஒன்றை தெரிவித்து நிராகரிப்பதாக இருந்தால், அது நாடாளுமன்ற ஜனநாயகம் தொடர்பான அறிவீனமாகும். அதேபோன்று பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கு நாடாளுமன்றத்துக்கு இருக்கும் பொறுப்புக்கூறலை நிராகரிப்பதாகும். அதனால் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவரும் உரிமையை நிராகரிக்காமல், அதன் உள்ளடக்கம் தொடர்பில் எங்களுக்கு விவாதிக்க முடியும். அதுதொடர்பில் எங்களுக்கு பிரச்சினை இல்லை என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2025இல் வெளியிடப்பெற்றது